அலையாத்திக் காடுகளை வளர்ப்போம் அந்தமானை அழிவில் இருந்து காப்போம்

அந்தமான் குரல்

தீவுகளின் துணிவான ஒரே தமிழ் நாளிதழ்

ANDAMAN KURRAL - TAMIL DAILY

மழை நீர்... உயிர் நீர்... மரம் வளர்ப்போம்! வளம் பெறுவோம்!!

பதிவுஎண் RNI: 30901/76 தி.ஆ.2056 ஆடி, 11 செவ்வாய்கிழமை 28 சூலை, 2026 | பக்கம் : 6 | விலை: ரூ.2.00 | குரல்—52 | ஓசை 141

இது எனக்கு புதிய துறை - மத்திய கல்வி அமைச்சராக பதவியேற்ற பிரகலாத் ஜோஷி



புதுடெல்லி: மத்திய கல்வி அமைச்சராக பிரகலாத் ஜோஷி நேற்று பதவியேற்றுக் கொண்டார்.

நீட் வினாத்தாள் கசிவு தொடர்பாக கரப்பான்பூச்சி ஜனதா கட்சி சார்பில் டெல்லி ஜந்தர் மந்தர் மைதானத்தில் தொடர் போராட்டம் நடத்தப்பட்டது. மத்திய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் ராஜினாமா செய்ய வேண்டும், நீட் வினாத்தாள் கசிவால் பாதிக்கப்பட்டு தற்கொலை செய்து கொண்ட மாணவர்களின் குடும்பத்துக்கு ரூ.1 கோடி நஷ்ட ஈடு வழங்க வேண்டும். போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் மீது வழக்கு எதுவும் பதிவு செய்ய கூடாது என்று கரப்பான்பூச்சி ஜனதா கட்சியினர் வலியுறுத்தினர்.

இதன் காரணமாக கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் நேற்று முன்தினம் பதவியை ராஜினாமா செய்தார். புதிய கல்வி அமைச்சராக பிரகலாத் ஜோஷி நியமிக்கப்பட்டார். இதைத் தொடர்ந்து டெல்லியில் சேவா தீர்த் அலுவலக வளாகத்தில் உள்ள கல்வி அமைச்சகத்தில் அவர் நேற்று புதிய கல்வி அமைச்சராக பதவியேற்றுக் கொண்டார்.

பின்னர் அவர் நிருபர்களிடம் கூறியதாவது: கடந்த சனிக்கிழமை கர்நாடகாவில் இருந்தேன். மத்திய கல்வி அமைச்சராக

(தொடர்ச்சி... பக்.2)

யுனெஸ்கோ பாரம்பரியப் பட்டியலில் சாரநாத்: இந்தியாவுக்கு 45-வது பெருமை

புதுடெல்லி: உத்தரப் பிரதேச மாநிலத்தில் அமைந்துள்ள பழமையான பவுத்த புனிதத் தலமான சாரநாத், யுனெஸ்கோ அமைப்பின் உலகப் பாரம்பரியப் பட்டியலில் நேற்று அதிகாரப்பூர்வமாகச் சேர்க்கப்பட்டது.

தென்கொரியாவின் பூசான் நகரில் நடைபெற்று வரும் யுனெஸ்கோ உலகப் பாரம்பரியக் குழுவின் 48—வது அமர்வில் இந்த முக்கிய முடிவு எடுக்கப்பட்டது. இந்த அறிவிப்பால், யுனெஸ் கோவின் உலகப் பாரம்பரியப் பட்டியலில் இடம்பெறும் இந்தியாவின் 45—வது இடமாக சாரநாத் பெருமை பெற்றுள்ளது. முன்னதாக, 2025—26 தேர்வுச் சுற்றுக்காக பழமையான பவுத்ததலம் — சாரநாத் என்ற ஆவணத்தை யுனெஸ்கோவிடம் சமர்ப்பித்துள்ளதாக மத்திய அமைச்சர் கஜேந்திர சிங் ஷெகாவத், கடந்த 2025 ஆகஸ்டில் நாடாளுமன்றத்தில் எழுத்துப்பூர்வமாகத் தெரிவித்திருந்தார்.

உலகின் கலாச்சார மற்றும் இயற்கைச் சின்னங்களைப் பாதுகாக்கும் சர்வதேச ஒப்பந் தத்தைச் செயல்படுத்தும் 2 முக்கிய அமைப்புகளில், இந்த உலகப் பாரம்பரியக் குழுவும் ஒன்றாகும்.

இ20 பெட்ரோல் விவகாரத்தில் என் குடும்பத்தினர் மீது அவதூறு - நீதிமன்றத்தை நாடிய நிதின் கட்கரி

மும்பை: இ20 எனப்படும் எத்தனால் கலந்த பெட்ரோல் விவகாரம் தொடர்பாக, தன்னையும் தன் குடும்பத்தினரையும் தொடர்புபடுத்தி சமூக ஊடகங்களில் பரப்பப்படும் குற்றச்சாட்டுகளுக்கு எதிராக மத்திய அமைச்சர் நிதின் கட்கரி மும்பை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளார்.

மும்பை உயர் நீதிமன்றத்தில் நிதின் கட்கரி தாக்கல் செய்துள்ள மனுவில், சமூக ஊடகங்களில் உள்ள சர்ச்சைக்குரிய பதிவுகள், மீம் மூக்கேக் படங்கள் மற்றும்



எத்தனால் கலந்த பெட்ரோல் திட்டத்தின் மூலம் கிடைக்கும் லாபத்துடன் என்னையும் எனது குடும்பத்தினரையும் தொடர்புபடுத்தி குற்றச்சாட்டுகள் பரப்பப்படுகிறது. எத்தனால் கலப்புக் கொள்கையானது பெட்ரோலிய அமைச்சகத்தால் நிர்வகிக்கப்படுகிறது. எனவே, இதன்மூலம் எனது குடும்பம் ஆதாயம் அடைவதாக சொல்வது ஆதாரமற்ற பொய் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதிக அளவிலான எத்தனால் கலப்பு சில வாகனங்களின் செயல்திறனில் சிக்கல்களையும், சேதத்தையும் ஏற்படுத்தியதாகச் சமூக ஊடகங்களில் வெளியான குற்றச்சாட்டுகளைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, தன் மீதான அவதூறு பதிவுகளை பரப்ப உதவிய குற்றச்சாட்டில் மெட்டா, கூகுள் உள்ளிட்ட சமூக ஊடகத் தளங்களுக்கு எதிராக உரிமையியல் வழக்கு தொடர நிதின் கட்கரிக்கு மும்பை உயர் நீதிமன்றம் அனுமதி அளித்தது.

அரசாங்கத்தின் இ20 எத்தனால் கலந்த பெட்ரோல் திட்டம் தொடர்பாக மத்திய அமைச்சர் குறித்த தவறான தகவல்களைப் பரப்பியதாக நான்கு சமூக ஊடகப் பிரபலங்களுக்கு எதிராக நாக்பூரில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு விசாரணை நடத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

Smt. Lakshmi Devi
Group of Institutions
24 OF EXCELLENCE



PRACTICE AT OWN HOSPITAL

Your Pathway to a Career in Healthcare

Scholarship Admission

NURSING
- B.Sc Nursing
- GNM
- PB.B.Sc Nursing
- M.Sc Nursing
  - Paediatrics
  - Psychiatric
  - Medical Surgical
  - OBG
  - Community

PHARMACY
- D.Pharm
- B.Pharm
- B.Pharm Lateral
- M.Pharm
  - Pharmacology
  - Pharmaceutics

PHYSIOPHERAPY
- BPT

ALLIED HEALTH SCIENCES
- B.Sc MLT
- B.Sc MIT
- B.Sc AT&OT
- B.Sc Renal Dialysis

DIPLOMA IN PARAMEDICAL
- Diploma in MLT
- Diploma in AT & OT
- Diploma in Radiology
- Diploma in Health Inspector

FOR SPOT ADMISSION : 96795 67148 | 99332 23801

Press the Button on Electric. Now.

Times change.
You change.
How you think, live, love —
Everything changes.

How you drive — that changes too.
Not later. Not someday. Today.
Switch to a Mahindra Electric SUV
Like 55 000+ people already have.

Because when change feels so good.
You can't wait to be a part of it.

Range Confidence 500 km real world range*
Real Savings ₹10–17 Lakh over 5 years**
Business Benefit 40% depreciation benefit**
Battery Assurance Lifetime battery warranty#
Fast Charge 20% to 80% charge in 20 min^



BE6 XEV 9e XEV 9S

JADWET TRADING COMPANY
ATR ROAD, GARACHARAMA, SRI VIJAYA PURAM, A & N ISLANDS
7601094094
7695081314
NOW OPEN ON SUNDAYS

தலையங்கம்

அந்தமான் குரல்
குரல் – 52 ஓசை 141
தி.ஆ.2056 ஆடி 11 செவ்வாய் 28 சூலை 2026

நிலவுரீமையைப் பெற பெண்கள் தயாராகவில்லை! - ஆய்வாளர் நித்யா ராவ்

பிரிட்டனின் கிழக்கு ஆங்கிலியா பல்கலைக்கழகத்தில் பாலின — மேம்பாட்டுத் துறையின் பேராசிரியராகப் பணிபுரிந்துவரும் நித்யா ராவ், 30 ஆண்டுகளுக்கும் மேலாக இந்தியாவிலும் ஆப்ரிக்க நாடுகளிலும் பாலினச் சமத்துவம், கல்வி, வேலைவாய்ப்பு சார்ந்த ஆய்வுகளில் ஈடுபட்டவர்.

'Quest for Identity'> 'Good Women Do Not Inherit Land' உள்ளிட்ட புத்தகங்களையும் எழுதியுள்ளார். நித்யா ராவின் ஆராய்ச்சிகள், சமூகத்தில் பெண்களின் பங்களிப்பை வலுப்படுத்துவதிலும் உரிமைகளை மேம்படுத்துவதிலும் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. அவருடனான பேட்டி:

இந்தியாவில் காலநிலை மாற்றம் பாலினரீதியாக ஏற்படுத்தியுள்ள தாக்கம் என்ன? ஓர் ஆராய்ச்சியாளராக இம்மாற்றங்களை எப்படிப் பார்க்கிறீர்கள்? — காலநிலை மாற்றத்தினால், வெப்பம், மழைப்பொழிவு, நீரோட்டங்களில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. விவசாய உற்பத்தி பாதிக்கப்பட்டிருக்கிறது. இதனால், வட இந்தியா — கிழக்கு இந்தியாவின் கிராமப் பகுதிகளைச் சேர்ந்த ஆண்கள் விவசாயத்தை விட்டு வேறு வேலை தேடித் தென்னிந்தியாவுக்கும், வெளிநாடுகளுக்கும் இடம்பெயர்ந்து வருகின்றனர்.

ஆண்கள் இல்லாத சூழலில், விவசாயம், வீட்டுப் பராமரிப்பு வேலைகளில் பெண்களே ஈடுபடுகிறார்கள். இதனால் பெண்களின் பணிச்சுமை அதிகரிக்கிறது; அதேநேரத்தில், குடும்பத்தில் முக்கிய முடிவுகளை எடுக்கும் நிலைக்குப் பெண்கள் வந்துள்ளனர். எனினும், வேலை ஆட்களை நியமிப்பது, வளங்களை நிர்வகிப்பது போன்ற நிலைகளில் பெண்கள் இல்லை.

சமீபத்தில், இந்திய மாநிலங்களில் ஆய்வு ஒன்றை நடத்தினோம். அதில் உத்தராகண்ட் போன்ற மாநிலங்களில் ஆண்கள் இல்லாத சூழலில், வயதான பெண்கள் குடும்பத்தில் முடிவெடுக்கும் அதிகாரத்தைக் கொண்டிருந்தனர்; இளம் பெண்களோ பணிச் சுமையுடனும், நிலம் போன்ற வளங்களில் உரிமையில்லாத நிலையிலும் இருப்பது தெரியவந்தது.

காலநிலை மாற்றம் பாலினச் சமத்துவமின்மையைத் தீவிரப்படுத்துகிறதா? — காலநிலை மாற்றத்தினால் ஆண்கள், வேலையிழப்பை எதிர்கொள்கின்றனர். ஆண்களால் போதுமான அளவு வருமானம் ஈட்ட முடியாத நிலையில் குடும்பத்தின் வறுமையைப் போக்கப் பெண்கள் வேலைக்குச் செல்கிறார்கள். இது, பெண்களுக்கு எதிரான வன்முறை அதிகரிப்பதற்குக் காரணமாகிறது.

கணிக்க முடியாத மழை அளவு, வறட்சியினால் மகாராஷ்டிரத்தில் கணவன், மனைவி இருவரும் வேலைக்குச் சென்றால்தான் குடும்பத்தை நடத்த முடியும் என்கிற நெருக்கடி நிலவுகிறது; இதனால் அங்கு இளம் வயதுத் திருமணங்கள் அதிகரித்து உள்ளன; பெண்களின் கல்வியும் பாதிக்கப்படுகிறது. இவ்வாறு, காலநிலை மாற்றம் பெண்களுக்கான வாய்ப்புகளைக் குறைப்பதுடன், பாலினச் சமத்துவமின்மையையும் தீவிரப்படுத்துகிறது.

உணவு உற்பத்தி — ஊட்டச்சத்துப் பாதுகாப்பில் கிராமப்புறப் பெண்களின் பங்களிப்பு எவ்வளவு முக்கியமானது? — காலநிலை மாற்றத்தினால் கிராமப் பகுதிகளில் விவசாய நிலம் பெண்களின் கைகளுக்கு வந்துள்ளது. அந்த வகையில் உணவு உற்பத்தி — ஊட்டச்சத்துப் பாதுகாப்புக்கும் பெண்கள் முக்கியப் பொறுப்பாகி உள்ளனர்.

எனினும், துரதிர்ஷ்டவசமாக, விவசாயத்தில் பெண்களின் பங்களிப்பானது இந்தியாவில் அங்கீகரிக்கப்படுவது இல்லை. விவசாயம் சார்ந்த மூலப்பொருள்களை வாங்க ஆண்களே சந்தைக்குச் செல்வதால், பெண்களுக்கு அது சார்ந்த நேரடி அனுபவம் குறைவாக உள்ளது.

இத்தகைய சூழலில், விவசாயம் சார்ந்த முழுமையான அறிவைப் பெண்களால் பெற முடிவதில்லை. இதுகுறித்த விழிப்புணர்வைப் பெண்களிடம் மத்திய — மாநில அரசுகள் ஏற்படுத்த வேண்டும். அடுத்ததாக, விவசாயத்தில் பெண்களின் பங்களிப்பை அங்கீகரிக்க, பெண்களுக்கு நிலப் பகிர்வில் முக்கியத்துவம் அளித்துக் கடன் வழங்குதலை இலகுவாக்க வேண்டும். விவசாயம் சார்ந்த தகவல்கள், தொழில்நுட்பம், இயந்திரங்கள் கிடைப்பதை எளிமையாக்க வேண்டும். இதனால் மாசடைந்த நீரையே அப்பெண்கள் பயன்படுத்துகிறார்கள். எரிபொருளுக்காகவும் நீண்ட நேரத்தைச் செலவிடுகிறார்கள். ஊட்டச்சத்துப் பாதுகாப்பில், குழந்தைகளுக்குச் சரியான நேரத்தில் உணவளிப்பது அவசியம். விவசாய நிலங்களில் வேலை செய்யும் தாய்மார்களால் குழந்தைகளுக்குச் சரியான நேரத்தில் உணவளிக்க முடிவதில்லை.

இது எனக்கு புதிய துறை...

தொடர்ச்சி001)

நியமிக்கப்பட்ட உடன் அன்றிரவே டெல்லியை வந்தடைந்தேன். ஞாயிற்றுக் கிழமை காலையில் கல்வி அமைச்சராக பதவியேற்றுக் கொண்டேன். இது எனக்கு புதிய துறை. எனவே முதல் கட்டமாக அனைத்து அதிகாரிகள் உடன் முக்கிய ஆலோசனைகளை நடத்துவேன்.

கல்வித் துறையில் இதற்கு முன்பு எடுக்கப்பட்ட முக்கிய முடிவுகள் குறித்து கேட்டறிவேன். பிரதமர் நரேந்திர மோடி என்னை நம்பி மிகப் பெரிய பொறுப்பை வழங்கி உள்ளார். எனவே மிகுந்த கவனத்துடன் செயல்படுவேன். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

நீட் வினாத்தாள் கசிவு, சிபிஎஸ்இ 12—ம் வகுப்பு விடைத்தாள் திருத்தும் பணி குளறுபடி காரணமாக மத்திய கல்விச் செயலாளர் வினீத் ஜோஷி கடந்த 24—ம் தேதி பணியிட மாற்றம் செய்யப்பட்டார். புதிய கல்விச் செயலாளராக டி.கே. அனில்குமார் நியமிக்கப்பட்டார். மத்திய கல்வித் துறையின் செயல்பாடுகள் குறித்து புதிய அமைச்சர் பிரகலாத் ஜோஷியிடம், புதிய செயலாளர் அனில் குமார் விரிவாக எடுத்துரைத்தார்.

இதைத் தொடர்ந்து நீட், ஜேஇஇ உள்ளிட்ட நுழைவுத் தேர்வுகளை நடத்தும் தேசிய தேர்வு முகமை அதிகாரிகளுடன் அமைச்சர் பிரகலாத் ஜோஷி நேற்று மாலை முக்கிய ஆலோசனை நடத்தினார். நுழைவுத் தேர்வுகளில் மேற்கொள்ள வேண்டிய சீர்திருத்தங்கள் குறித்து அப்போது விரிவாக விவாதிக்கப்பட்டது.

தேசிய தேர்வு முகமையில் (என்டிஏ) இருந்து ஏற்கெனவே 47 அலுவலர்கள் நீக்கப்பட்டு உள்ளனர். அடுத்த ஒரு மாதத்துக்குள் என்டிஏ அமைப்பு முழுமையாக மாற்றி அமைக்கப்படும் என்று மத்திய கல்வித்துறை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

சுயசார்பு இந்தியாவின் அடையாளம் ஐஎன்எஸ் மகேந்திரகிரி - பிரதமர் மோடி பெருமிதம்

புதுடெல்லி: உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட ஐஎன்எஸ் மகேந்திரகிரி போர்க்கப்பல், சுயசார்பு இந்தியாவின் அடையாளமாக விளங்குகிறது என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

மாதத்தின் கடைசி ஞாயிற்றுக்கிழமை மனதின் குரல் வானொலி நிகழ்ச்சி வாயிலாக நாட்டு மக்களுடன் பிரதமர் மோடி உரையாற்றி வருகிறார். இதன்படி 130—வது மனதின் குரல் நிகழ்ச்சி நேற்று ஒலிபரப்பானது.

இதில் பிரதமர் நரேந்திர மோடி கூறியிருப்பதாவது: கார்கில் போரின் வெற்றி விழாவை இன்று (ஜூலை 26) கொண்டாடுகிறோம். கார்கிலின் உயரமான சிகரங்கள், கடும் குளிர், எதிரிகளின் சவால்களை நமது ராணுவ வீரர்கள் தீரத்துடன் எதிர்கொண்டனர். இந்த நேரத்தில் கார்கில் போரில் உயிர்த்தியாகம் செய்த வீரர்களை நினைவுகூர்ந்து தலைவணங்குகிறேன்.

இந்திய கடற்படையில் அண்மையில் ஐஎன்எஸ் மகேந்திரகிரி போர்க்கப்பல் இணைக்கப்பட்டது. உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட இந்த போர்க்கப்பல் சுயசார்பு இந்தியாவின் அடையாளமாக விளங்குகிறது. அண்மையில் இந்தோனேசியாவில் பயணம் மேற்கொண்டேன். அப்போது பிரம்மோஸ் ஏவுகணைகளை ஏற்றுமதி செய்ய இந்தியா, இந்தோனேசியா இடையே முக்கிய ஒப்பந்தம் கையெழுத்தானது. ஆயுத உற்பத்தி, ஏற்றுமதியில் இந்தியா புதிய சிகரங்களை தொட்டு வருகிறது.

மனதின் குரல் நிகழ்ச்சியில் ஏற்கெனவே மழைநீர் சேகரிப்பு இயக்கம் பற்றி பேசினேன். தற்போதைய பருவமழையின்போது ஒவ்வொரு சொட்டு நீரையும் சேமிக்க வேண்டும். மழைநீர் சேகரிப்பை மிகப்பெரிய இயக்கமாக மாற்ற வேண்டும். சில நாட்களுக்கு முன்பாக கிளாஸ்கோவில் காமன்வெல்த் போட்டிகள் தொடங்கின. இந்த போட்டியில் நமது வீரர்கள் பல்வேறு சாதனைகளை படைத்து வருகின்றனர். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

ஜூலை 27—ம் தேதி முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல் கலாமின் நினைவு நாள் ஆகும். அவர் பன்முகத்தன்மை கொண்டவர். எனினும் அவருடைய இதயத்துக்கு மிகவும் நெருக்கமானது ஆசிரியர் பணி. ஒவ்வொருவரும் மிகப் பெரிய கனவு காண வேண்டும் என்று சிறார், இளைஞர்களை அவர் ஊக்கப்படுத்தினார். இந்த நேரத்தில் அவருக்கு மரியாதை செலுத்துகிறேன் என்று பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

வீடு தோறும் தேசியக் கொடி

பிரதமர் மோடி பேசும்போது, சுதந்திர தினத்தை ஒட்டி கடந்த சில ஆண்டுகளாக வீடுதோறும் தேசியக்கொடி யேற்றும் இயக்கத்தை நடத்தி வருகிறோம்.

வரும் ஆக.15—ம் தேதி சுதந்திர தினத்தை கொண்டாட உள்ளோம். இந்தாண்டும் வீடுதோறும் தேசியக் கொடியை பறக்கவிட வேண்டுகிறேன். சுதந்திர தினத்தையொட்டி ஏராளமானோர் புதிய சிந்தனைகளை எனக்கு வழங்குவது வழக்கம். இந்த ஆண்டும் உங்களது கருத்துகளை அலபழஎ இணையத்தில் பதிவு செய்ய வேண்டுகிறேன் என்றார்.

லிவ்-இன் உறவு முறை ஒரு சீரழிவு - ஆர்எஸ்எஸ் தலைவர் மோகன் பாகவத்

புதுடெல்லி: திருமணம் என்பது தர்மத்தை வளர்க்கும் ஓர் ஒழுக்கம் என்று தெரிவித்துள்ள ஆர்எஸ்எஸ் தலைவர் மோகன் பாகவத், லிவ்—இன் உறவு முறை ஒரு சீரழிவு என்று குறிப்பிட்டுள்ளார்.

விஸ்வ மாங்கல்ய சபா ஏற்பாடு செய்திருந்த நவீன கால தாய்மை குறித்த நிகழ்ச்சியில் உரையாற்றிய மோகன் பாகவத், ஜென்ஸீ தலைமைமுறையினர மற்றவர்களைப் பின்பற்றும் இயல்புடையவர்கள், உணர்ச்சிவசப் படக்கூடியவர்கள். அவர்கள் அமைதியான



மனதுடன் சிந்திப்பதில்லை. எது அவர்களுக்கு உண்மையாகனதாகத் தோன்றுகிறதோ அதையே அவர்கள் ஏற்றுக் கொள்கிறார்கள்.

திருமணம் என்பது தர்மத்தை வளர்க்கும் ஓர் ஒழுக்கம். அதற்கு மாற்றாக லிவ்—இன் உறவு முறை உள்ளது. இது நவீனத்துவம். இதன் விளைவுகள் என்ன? நமக்குத் தேவை மகிழ்ச்சிதான், பொறுப்புகள் அல்ல. தேவைப்படும்போது ஒன்றாக இருப்பது, தேவைப்படாதபோது பிரிந்து செல்வது. இதில், பொறுப்புகள் ஏதுமில்லை. இதனால் என்ன வளரும்? என்ன வளர்ந்து கொண்டிருக்கிறது என்பதை உலகெங்கம் பாருங்கள்.

நவீனத்துவம் தேவை. காலத்துக்கு ஏற்ப மாறுவது நமது நாட்டின் பாரம்பரியத்தின் விதி. லிவ் இன் உறவு முறை ஒரு சீரழிவு. மேற்கத்திய கலாச்சாரத்தை கண்மூடித்தனமாக பின்பற்றும் போக்கு. திருநங்கைகள் நமது சமூகத்தின் ஒரு பகுதி. அவர்களை கீழ்த்தரமாகப் பார்க்கக்கூடாது.

குழந்தைகளின் அலைபேசி பயன்பாட்டு ஒழுக்கத்தைப் பற்றி நாம் போதிக்கிறோம். ஆனால், நாமே அலைபேசிகளுடன் ஒட்டிக்கொண்டிருக்கிறோம். குழந்தை அழுதால்கூட தாய் அலைபேசியை அதனிடம் கொடுத்து விடுகிறார். அந்த அளவுக்கு நிலைமை உள்ளது. அலைபேசி பயன்பாட்டில் பெற்றோர்கள் ஒழுக்கத்தைக் கடைப்பிடிக்க வேண்டும்.

புதிய தலைமுறையினரிடம் அவர்கள் எதைப் பார்க்க விரும்புகிறார்களோ, அதை அவர்கள் தங்கள் நடத்தையில் கடைப்பிடிக்க வேண்டும். சமூகத்தில் நீங்கள் காண விரும்பும் மாற்றமாக நீங்களே இருங்கள். சமூக ஊடகங்களில் செலவிடும் நேரத்தைக் குறைத்துக் கொள்ளுங்கள். புதிய தலைமுறை குழந்தைகளின் கேள்விகளுக்கு பெற்றோர் பதில் அளிக்க வேண்டும். குடும்பம் சார்ந்த பல்வேறு பிரச்சினைகளைத் தீர்க்க குடும்ப உறுப்பினர்களிடையே உரையாடல் அவசியம்.

நாம் அரசாங்கத்தையே எதிர்பார்க்கிறோம். ஆனால், நமது பாரம்பரியத்தில் அரசாங்கம் இரண்டாம்பட்சம்தான். சமூகம்தான் முதன்மையானது. அரசாங்கம் இந்த சட்டத்தையோ அந்த சட்டத்தையோ இயற்ற வேண்டும் என்று நாம் சொல்கிறோம். ஆனால், அதை நாம் நம் வீட்டிலேயே செய்ய முடியும். பழமையானவை அனைத்தும் பயனற்றவை என்று நம்பும் நிலையை ஆங்கிலேயர் ஆட்சி உருவாக்கியது. பல்வேறு விவகாரங்களில் முழுமையற்ற பார்வையால் மேற்கத்திய நாடுகள் சிக்கல்களை எதிர்கொண்டு வருகின்றன. நாமும் அவர்களையே பின்பற்றுகிறோம் எனத் தெரிவித்தார்.





MANAPPURAM FINANCE LTD.

CIN: L65910KL1992PLC006623,
Registered Office: W - 4/ 638A, Manappuram House, P.O. Valapad, Thrissur - 680 567, Kerala, India

தங்க நகைகள் பொது ஏலம்

நகைகளை அடமானம் வைத்திருப்போர் மற்றும் குறிப்பாக பொதுமக்களுக்கு இதன் மூலம் தெரிவிப்பது யாதெனில், கீழ்க்கண்ட கணக்குகளில் அடமானம் வைக்கப்பட்டுள்ள தங்க நகைகளுக்கான பொது ஏலம் கிழ்க்கண்ட கிளைகளில் 17.08.2026 தேதி அன்று காலை 10 மணி மில் இருந்து நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.தங்க நகைகளை மீட்க தவறிய வாடிக்கையாளர்களின் நகைகளை, அவர்களுக்கு பதிவு தபால்கள் அனுப்பிய பிறகும், நினைவுபடுத்திய பிறகும், நாங்கள் தங்க நகைகளை ஏலம் விடுகிறோம். ஏலம் போகாத தங்க நகைகளை எவ்வித முன்னறிவிப்பின்றி எந்த ஒரு இதர நாளிலும் ஏலம் விடப்படும். ஏலம் விடப்படும் இடம் அல்லது தேதியில் ஏதேனும் மாற்றங்கள் (இருந்தால்) அவை பற்றிய அறிவிப்பு ஏலம் நடக்குமிடத்தில் எழுதி வைக்கப்படும் மற்றும் இணையதளத்தில் வெளியிடப்படும்.வேறு எந்த முன்னறிவிப்பும் அளிக்கப்படாது.

அடமானங்களின் பட்டியல் :

அந்தமான், பாபுலேன் பொர்ட்பிலேயர், 0129170700058476, 8589, 9322, 9370, 9429, 0062, 0114, 0128, 0400, 0915, 0953, 1023, 1667, 1882, 2466, 2532, 2577, 2783, 2857, 3132, 3160, 3243, 3506, 3656, 0129170730013424, 4128, 4286, 4771, 8493, 8733, 9598, 9640, 3859, 4110, 4111, 4112, பம்போஃப்லாட் அந்தமான், 0129280700028639, 8918, 9642, 9852, 9887, 0282, 0649, 0928, 0940, 0978, 0996, 1288, 1289, 1305, 1356, 1395, 0129280730002891, 2972, 4249, 4802, 4912, 6664, ஜன்கிலீகாட் பொர்ட்பிலேயர், 0131420700041805, 3158, 3533, 4027, 4149, 4553, 5494, 5635, 5736, 5962, 6036, 6089, 6389, 6487, 6704, 6730, 6742, 6799, 6830, 0131420730010009, 0933, 1032, 5161, 5173, 5174, 5180, ஒல்டு பாடுகான், 0131400700036484, 7070, 7635, 7755, 7940, 8284, 8304, 8336, 8558, 8745, 8829, 0131400730004546, 6146, 6296, 6297, 6298, 6302, 6303, 6304, 6929, 7202, 8599, 3455, 3460, 3462, பத்ரகடா ஐங்ஸன், 0131390700046335, 6430, 6489, 6499, 6594, 6792, 6918, 7188, 7885, 7935, 8182, 8365, 8452, 8572, 8594, 8674, 8909, 8944, 9089, 9090, 9396, 9428, 9483, 9563, 9659, 9880, 9892, 9913, 9949, 0131390730005210, 5950, 6361, 7089, 8198, 8255, 8256, 8477, 8482, 0155, 0156, 0157, 4456, 4457, 4461, 4463,

மேற்கண்ட ஏலத்தில் பங்கேற்க விரும்பும் நபர்கள் பின்வருவனவற்றைப் பின்பற்ற வேண்டும்: ஆர்வள்ள ஏலதாரர்கள், ஏலம் நடைபெறும் அதே நாளில், ரூ. 10,000/- தொகையை ஈஎம்டி ஆக (வெற்றி பெறாத ஏலதாரர்களுக்குத் திருப்பித் தரப்படும்) என்இஎஃப்டி/ஆர்டிஜிஎஸ் மூலம் செலுத்த வேண்டும். ஏலத்தில் பங்கேற்பவர்கள் செல்லுபடியாகும் அடையாள அட்டை/பான் கார்டை வைத்திருக்க வேண்டும். மேலும் விவரங்களுக்கு 09072607147 என்ற எண்ணைத் தொடர்பு கொள்ளவும்.

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
மணப்புரம் பைனான்ஸ் லிமிடெட்-க்காக



SPECIAL PRICE FOR
BULK & PROJECT REQUIREMENT

NOW @ WHOLESALE PRICES

JINDAL
Jindal Aluminium Ltd.

ALL TYPE OF ALUMINIUM SECTIONS

AUTHORISED DEALER

SRG SRG Traders
M.A. ROAD, PHOENIX BAY
PORT BLAIR, ANDAMANS
PH: 03192-244400/ 9434281641



Treat your feet as we bring you the latest and imported footwear for all age groups



RAHMAT TRADING COMPANY PVT. LTD.
ABERDEEN BAZAR, PORT BLAIR, A&N ISLANDS | PHONE : 03192-232711 / 234731



விளையாட்டுச் செய்திகள்

கட்டிட வேலையில் இருந்து கிளாஸ்கோவுக்கு... - சாதனை படைத்த ரிஷிகண்டா சிங்!

கிளாஸ்கோ: கிளாஸ்கோ காமன்வெல்த் விளையாட்டுப் போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்றதன் மூலம் சாதனை படைத்துள்ள ரிஷிகண்டா சிங், கட்டிடம் கட்டுமிடத்தில் தினக் கூலியாக இருந்து சாம்பியனாக மாறியவர் என்ற செய்தி அனைவரையும் கவர்ந்துள்ளது.

மணிப்பூர் மாநிலம் இம்பாலைச் சேர்ந்த 28 வயதான ரிஷிகண்டா சிங், ஏழ்மையான குடும்பத்தில் பிறந்தவர். தனது இளம்வயதை பெரும்பாலும் வேலை பார்த்தே கழித்துள்ளார். இம்பாலின் பல்வேறு பகுதிகளில் கட்டிட வேலைகளில் அவர் தினக் கூலியாக வேலை பார்த்துள்ளார். செங்கல், சிமெண்ட், பலகைகளை சுமந்து பிழைப்பை நடத்தி வந்த அவர் தனது விடாமுயற்சியால் இன்று உலக விளையாட்டு ரசிகர்களை திரும்பிப் பார்த்து வந்துள்ளார்.

தினந்தோறும் செங்கல், கட்டுமானப் பொருட்களை தூக்கி துக்கி தனது உடலை வலுப்படுத்தி வந்துள்ளார். இதனால் இவரது கவனம் பளுதுக்குதல் விளையாட்டுக்கு சென்றுள்ளது. இதற்கு முன்பு 2017—ல் நடைபெற்ற தேசிய பளுதுக்குதல் போட்டியில் அவர் சாம்பியன் பட்டம் வென்றிருந்தார். மேலும் இளையோர் காமன்வெல்த் போட்டியிலும் அவர் வெண்கலத்தை கைப்பற்றியிருந்தார். தனது வெற்றி குறித்து ரிஷிகண்டா சிங் கூறும்போது, முதலில் விளையாட்டு போட்டிகளில் பங்கேற்று சிறிய அளவிலான வெற்றிகளைப் பெற்றேன். அதன் பின்னர் போதிய பணம் கிடைக்காததால் விளையாட்டை விட்டு விட்டு கட்டிட வேலையில் சேர்ந்தேன். தினக் கூலி வேலையிலிருந்து பளுதுக்கும் விளையாட்டில் சேர்ந்த போது சாதனை படைக்க முடியும் என்று நம்பினேன். தொடக்கத்தில் பெரும்பாலும் தோல்விகளே கிடைத்தன. ஒரு சிறந்த பளுதுக்கும் வீரராக வேண்டும் என்ற என் கனவும், அந்த விளையாட்டில் எனக்கிருந்த எதிர்காலமும் முடிந்துவிட்டதாகவே தோன்றியது. அப்போது நான் இம்பாலில் எனக்குக் கிடைத்த வேலையைச் செய்தேன். அதன் பின்னர் மீண்டும் பளுதுக்குதல் போட்டிகளுக்குத் திரும்பினேன். விடாத முயற்சியால் இப்போது வெள்ளிப் பதக்கம் வென்றுள்ளேன் என்றார். மணிப்பூர் மாநிலத்திலிருந்து காமன்வெல்த் விளையாட்டுப் போட்டியில் பதக்கம் வென்ற முதல் வீரர் ரிஷிகண்டா சிங் என்பது குறிப்பிடத்தக்கது. இம்பால் மேற்கு மாவட்டத்திலுள்ள நகைரங்பாம் கிராமத்தில் வளர்ந்த இவருக்கு விளையாட்டுதான் உலகமாக உள்ளது. இதுகுறித்து அவர் மேலும் கூறியதாவது: எங்கள் கிராமத்தில் நடைபெற்ற ஹோலி பண்டிகையின் போது நடத்தப்பட்ட ஒரு உள்ளூர் விளையாட்டு நிகழ்ச்சியில் எனது ஆசிரியர் ஒருவர் என்னை விளையாட்டில் சேருமாறு ஊக்கப்படுத்தினார். மேலும் இந்திய விளையாட்டு ஆணையத்தில் இணைந்து பயிற்சி பெறுமாறு கூறினார். பயிற்சி பெறுவதற்கான வாய்ப்பு கிடைப்பதாலும், பயிற்சிக்குப் பிறகு மைதானத்தில் உணவு கிடைப்பதாலும் நான் மிகவும் அதிர்ஷ்டசாலி என்று நினைத்தேன். என் பெற்றோர்களால் எனக்கு அந்த வசதியைச் செய்து தருவது எளிதல்ல என்பது எனக்குத் தெரியும். 2017—ல் சில போட்டிகளில் வெற்றி பெற்ற பின்னர் அடுத்த சில ஆண்டுகள் எனக்கு எந்த வெற்றியும் கிடைக்கவில்லை. கடந்த சில ஆண்டுகளாக மேற்கொண்ட அயராத உழைப்பு, பயிற்சியால் தற்போது உங்கள் எதிரில் வெள்ளிப் பதக்கம் வென்ற சாம்பியனாக நிற்கிறேன். இவ்வாறு அவர் தெரிவித்தார்.



Printed & Published, Owned by ***Anand Ganeshan*** *Printed & Published from* KRG Publication Pvt. Ltd., Buniyadabad, Post Box No. 167, H.P.O., Port Blair - 744101
Editor : ***K.Ganeshan*** *Chief Editor :* ***T.Sivaraman, Ph: 221082***

Public Grievance Cell, Delanipur. (Free Service)
Advisor : K.Ganeshan 7.00 a.m. to 8.30 a.m. and 7.00 p.m. to 8.00 p.m.
Phone : 03192 - 230442 / 9434280981 E.Mail: **andamanexpressportblair@gmail.com**